بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 15/07/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 26

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிக் கூறப்படுகிறது. ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் ஸன்ஆவில் முர்தத்களுக்கு எதிராக வெற்றி பெற்றதன் பின்னர், அங்கு உறுதியாக நிலைபெற்று விட்டார்கள். அப்போது இந்த நடவடிக்கைகள் பற்றி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களுக்கும் ஏமனின் பிற அதிகாரிகளுக்கும், ‘விரும்பினால் ஏமனிலேயே தங்கியிருக்கலாம் அல்லது தமது இடத்தில் யாரையாவது நியமித்து விட்டு மதீனாவுக்குத் திரும்பி வரலாம்’ என்று அதிகாரத்தை வழங்கினார்கள். அதற்குப் பிறகு, அனைவரும் மதீனாவுக்குத் திரும்பி வந்து விட்டார்கள். அதே வேளையில், ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களுக்கு, ‘இக்ரிமாவுடன் சேர்ந்து ஹிஸ்ர் மௌத்தில் ஸியாத் பின் லபீதுக்கு ஒத்துழைப்பு கொடுங்கள்’ என்று கட்டளையிடப்பட்டது. ஹஸ்ரத் ஸியாத் பின் லபீத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபீ உமய்யா (ரலி) அவர்கள் வருவதற்காகக் காத்திருந்தவாறு, கிந்தா கோத்திரத்தின் முர்தத்கள் மற்றும் ஸகாத் கொடுக்க மறுத்தவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளையை செயல்படுத்திய வண்ணம், ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபீ உமய்யா (ரலி) அவர்கள் ஸன்ஆவிலிருந்தும் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் அபீனிலிருந்தும் ஹிஸ்ர் மௌத்துக்குப் புறப்பட்டார்கள். முஆரிப் எனும் இடத்தில் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள்.

கிந்தா கோத்திரத்தின் ஓர் இளைஞன் தவறுதலாகத் தனது சகோதரனின் பெண் ஒட்டகத்தை ஸகாத்துக்காக ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்களிடம் கொடுத்து விட்டான். ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் அதில் நெருப்பால் சூடுபோட்டு ஸகாத்துக்கான அடையாளமிட்டு விட்டார்கள். அதற்குப் பிறகு, அந்த இளைஞன் ஒட்டகத்தை மாற்றித்தருமாறு கேட்டுக் கொண்டான். ஆனால், ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. அந்த இளைஞன் தனது கோத்திரத்து மக்களை உதவிக்கு அழைத்தான். அபூ ஸுமைதும் அவனுடன் இருந்தவர்களும் வலுக்கட்டாயமாக ஒட்டகத்தை அவிழ்த்து விட்டனர். ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் அபூ ஸுமைத்தையும் அவனுடன் இருந்தவர்களையும் சிறைபிடித்து விட்டார்கள். ஒட்டகத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அந்த மக்கள் மற்ற கோத்திரத்து மக்களையும் உதவிக்கழைத்தனர்.

ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் தாக்குதல் தொடுத்து அவர்களில் பலரைக் கொன்று விட்டார்கள். ஆனால், சிலர் தப்பியோடி விட்டனர். ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் அவர்களின் கைதிகளையும் விடுதலை செய்து விட்டார்கள். ஆனால், அவர்கள் திரும்பிச் சென்று போருக்குத் தயாராக ஆரம்பித்து விட்டனர். பனூ அம்ர், பனூ ஹாரிஸ், அஷ்அஸ் பின் கைஸ் மற்றும் சம்த் பின் அஸ்வத் ஆகிய கோத்திரத்தினர் ஸகாத் கொடுக்க மறுத்து முர்தத் ஆகி விட்டனர்.

ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள் பனூ அம்ர் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். அவர்களில் பலரைக் கொன்றார்கள். அதிகப்படியான மக்களைக் கைது செய்து மதீனாவுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். வழியில், அஷ்அஸ் மற்றும் பனூ ஹாரிஸ் கோத்திரத்தினர் தாக்குதல் தொடுத்து முஸ்லிம்களிடமிருந்து தங்களது கைதிகளை விடுவித்துக் கொண்டார்கள். எனவே, இந்த சம்பவத்திற்குப் பிறகு, அக்கம்பக்கத்தின் பல கோத்திரங்களும் அந்த மக்களுடன் இணைந்து கொண்டன. அவர்களும் முர்தத் ஆனதாக அறிவிப்பு செய்து விட்டனர்.

கிந்தா வாசிகள் ஹிஸ்ர் மௌத்துக்கு அருகில் உள்ள நுஜைர் எனும் ஒரு கோட்டையில் அடைபட்டு விட்டனர். ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் இக்கிர்மா (ரலி) அவர்களின் படை ஐயாயிரம் முஹாஜிர் மற்றும் அன்ஸாரி சஹாபிகளையும் ஏனைய கோத்திரங்களையும் உள்ளடக்கியிருந்தது. நுஜைர் கோட்டையில் அடைப்பட்டிருந்தவர்கள் இவ்வளவு பெரிய படையைப் பார்த்து பயந்து போயினர். அடைபட்டிருந்த மக்களின் தலைவன் அஷ்அஸ் தனக்கும் தன்னுடன் ஒன்பது பேருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கும் நிபந்தனையின் அடிப்படையில் கோட்டைக் கதவைத் திறந்து விட்டான்.

பயங்கரமான போருக்குப் பிறகு, முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் வெற்றிச் செய்தியுடனும் கைதிகளுடனும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முன் ஆஜரானார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஈராக் மற்றும் சிரியா போர்களில் அஷ்அஸ் தெளிவாகத் தென்படும் நற்பணிகளைச் செய்தான். அதனால், அவனது கௌரவம் மீண்டும் அதிகரித்து விட்டது. ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் முழுமையான அமைதி நிலவும் வரை, ஹிஸ்ர் மௌத் மற்றும் கிந்தாவிலேயே தங்கியிருந்தார்கள்.

**இவை, கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிரான கடைசி போர்களாகும்.** இவற்றிற்குப் பிறகு, அரபு நாட்டிலிருந்து கிளர்ச்சி முழுமையாக முடிவுக்கு வந்து விட்டது. எல்லாக் கோத்திரங்களும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்து விட்டன.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு, நபித்துவ வாதம் புரிந்த ஒவ்வொரு நபருக்கு எதிராகவும் சஹாபா பெருமக்கள் போர் புரிந்தார்கள் என்று மவ்லானா மௌதூதி அவர்கள் எழுதியிருப்பது சஹாபாவின் கூற்றுகளுக்கு எதிரானதாகும். மவ்லானா அவர்கள் இஸ்லாமிய இலக்கியங்களைப் படித்ததாகப் பெரிதும் வாதிடுகிறார்.

அந்தோ! அவர் இந்த விஷயம் தொடர்பாகக் கருத்து கூறும் முன்னர், இஸ்லாமிய வரலாற்றைப் படித்துப் பார்த்திருந்தால், அவருக்குத் தெரிய வந்திருக்கும். அதாவது, முஸைலமா கஸ்ஸாப், அஸ்வத் அன்ஸீ, ஸஜ்ஜாஹ் பின்த் ஹாரிஸ் மற்றும் துலைஹா பின் குவைலத் அஸதீ ஆகிய அனைவரும் எத்தகைய மக்களாக இருந்தனர் என்றால், அவர்கள் மதீனாவின் ஆட்சிக்குக் கட்டுப்பட மறுத்தி விட்டிருந்தனர். தத்தமது பகுதிகளில் தத்தமது ஆட்சிக்கான அறிவிப்பு செய்து விட்டிருந்தனர்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூத் (ரலி) எழுதுகிறார்கள்:** சஹாபா யாருடனெல்லாம் போர் புரிந்தார்களோ அந்த மக்கள் அரசாங்கத்துக்கு எதிரானவர்களாக இருந்தனர். வரி கொடுக்க மறுத்து விட்டிருந்தனர். மதீனா மீது தாக்குதல் தொடுத்து விட்டிருந்தனர்.

எவர்கள் இஸ்லாமிய வரலாற்றைத் திரித்துக் கூறுகிறார்களோ அவர்கள் இஸ்லாத்திற்குத் தொண்டாற்றவில்லை. இஸ்லாத்திற்குத் தொண்டாற்றுவது அவர்களது நோக்கம் என்றால், அவர்கள் எல்லாவற்றைக் காட்டிலும் உண்மைக்குப் பெரிய அந்தஸ்த்தைக் கொடுக்க வேண்டும். தவறாகக் கூறுவதை விட்டும் நிகழ்வுகளைத் திரித்துக் கூறுவதை விட்டும் முழுமையாகத் தவிர்ந்திருக்க வேண்டும்.

**ஒரு வரலாற்று ஆசிரியர் எழுதுகிறார்:** இப்போது அரபு நாட்டின் கிளர்ச்சிகள் அனைத்தும் முடிவுக்கு வந்து விட்டிருந்தன. எல்லா முர்தத்களும் தண்டிக்கப்பட்டு விட்டிருந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நாடு தழுவிய இந்தக் குழப்பத்தை எந்த அளவு துரிதமான முறையிலும், அழகான திட்டம் வகுத்தலாலும் வேரறுத்தார்கள் என்றால், அது அன்னாரின் உயர்த்தகுதிகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளது.

அன்னாருக்கு ஒவ்வோர் அடியிலும் எவ்வாறு இறை ஆதரவும் உதவியும் கிடைத்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஓராண்டுக்கும் குறைவான காலத்தில், முர்தத் ஆகுதல், கிளர்ச்சி செய்தல் எனும் குழப்பத்தைக் கட்டுக்குள் கொண்டு வருவது மற்றும் அரபு மண்ணில் இஸ்லாமிய ஆட்சியை மீண்டும் நிலைநாட்டி விடுவது என்பது ஒரு வியக்கத்தக்க சிறப்புப் பணியாகும்.

இஸ்லாத்தின் வெற்றியால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி இருந்தது. ஆனால், இந்த மகிழ்ச்சியில் பெயருக்குக் கூட ஆணவமும் அகங்காரமும் இருக்கவில்லை. ஏனென்றால், என்ன நடந்ததோ அது அல்லாஹ்வின் அருளாலும் கருணையினாலும் மட்டுமே நிகழ்ந்தது என்பதை அன்னார் அறிந்திருந்தார்கள். கையளவு முஸ்லிம்கள் மூலமாக முழு அரேபியாவிலும் உள்ள முர்தத்களின் வீறிய படையை எதிர்த்துப் போரிட்டு, அவர்களைத் தோற்கடித்து, இஸ்லாத்தின் கொடியை மிகவும் மேன்மையுடனும் கம்பீரத்துடனும் மீண்டும் உயர்த்தக்கூடிய ஆற்றல் அன்னாருக்கு இருக்கவில்லை.

கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் போர்களும் முடிவடைந்த பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் வருங்கால நடவடிக்கைகள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார்கள். அதாவது, அரேபியாவுக்கும் முஸ்லிம்களுக்கும் நீண்டகால எதிரிகளான ஈரான் மற்றும் ரோமானிய அரசாங்கங்களிடமிருந்து நிரந்தரமாகப் பாதுகாப்பாக இருப்பதற்கு என்ன செயல் முறை வகுக்க வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஏனெனில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலத்திலும் இவ்வீர் ஆற்றல்களும் அரேபியாவைத் தங்களது ஆதிக்கத்தின் கீழ் வைக்க விரும்பின. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆன பிறகு, பல பகுதிகளிலும் கோத்திரங்களிலும் எரிந்த, முர்தத் ஆகுதல் மற்றும் கிளர்ச்சி செய்தல் எனும் நெருப்பானது, மதீனாவின் ஆட்சிப்பகுதியை சுற்றிவளைத்துக் கொண்ட போது, அந்த சந்தர்ப்பத்தைப் பொன்னானதாகக் கருதி, ஹர்கல் உடைய படைகள் சிரியாவிலும் ஈரான் உடைய படைகள் ஈராக்கிலும் ஒன்று திரள ஆரம்பித்தன.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு, 'ஈராக் சென்றடைந்து, மக்களை உங்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு அல்லாஹ்வின் பால் அழைப்பு விடுங்கள். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டால் சரி, இல்லை என்றால், அவர்களிடம் ஜிஸ்யா வரி வசூல் செய்யுங்கள். அவர்கள் மறுத்தால், அவர்களுடன் போரிடுங்கள்' என்று எழுதினார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் படையின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. ஏனென்றால், ஒன்று, அதன் பெரும் பகுதி யமாமா போரில் பயன்பட்டிருந்தது. இரண்டாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'போரில் கலந்து கொள்வதற்கு யாரையும் வற்புறுத்தக் கூடாது. முந்தைய முர்தத் எவரையும், அவர் மீண்டும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தாலும் சரி, கலீஃபாவிடமிருந்து அனுமதி பெறாத வரை, இஸ்லாமிய படையில் இணைத்துக் கொள்ளக் கூடாது' என்று வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள்.

எனவே, மேற்கொண்டு உதவிப்படை அனுப்புமாறு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கஃகஃஆ பின் அம்ர் எனும் ஒரு நபரை மட்டும் அனுப்பி வைத்தார்கள். இதைக் கண்ட மக்கள் வியப்படைந்ததனால், அன்னார் கூறினார்கள்: எந்தப் படையில் கஃகஃஆ போன்ற மனிதர் உள்ளாரோ அது ஒருபோதும் தோல்வி அடைய முடியாது. பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்ளுக்கு, 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்துக்குப் பிறகும் அப்படியே இஸ்லாத்தில் நிலைத்திருக்கக்கூடிய மற்றும் முர்தத்களுக்கு எதிராகப் போர்களில் கலந்த கொண்ட மக்களுக்கு உங்களது படையில் கலந்து கொள்வதற்கு எழுச்சியூட்டுங்கள்' என்று எழுதினார்கள். இந்தக் கடிதம் கிடைத்ததும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது படையை வரிசைப்படுத்த துவங்கி விட்டார்கள்.

**ஈராக்கின் விவசாயிகள் தொடர்பாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மேற்கொண்ட ஹிக்மத்தான செயல்** பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அரேபியர்கள் ஈராக்கின் மண்ணில் விவசாயிகளாகப் பணியாற்றி வந்தார்கள். ஈரானிய நில உரிமையாளர்கள் ஏழை அரேபியர்கள் மீது அளவு கடந்த அநீதி இழைத்து வந்தனர். அடிமைகளிடம் நடந்து கொள்வதை விட மோசமாக அவர்களுடன் நடந்து கொண்டனர்.

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு ஆணையிட்டிருந்தார்கள்:** போரின் போது, அரேபிய விவசாயிகளுக்கு எந்தத் துன்பமும் கொடுக்கக்கூடாது. அவர்களுடன் எவ்விதத்திலும் தவறாக நடந்து கொள்ளக்கூடாது. இங்கு அரேபியர்களின் ஆட்சி நிலைபெற்றால், அவர்களின் அநீதிக்குள்ளான வாழ்நாள்கள் முடிவுக்கு வந்து விடும் என்பதையும், அவர்கள் தமது சமுதாயத்து மக்களால், உண்மையான நீதி, ஞயாயம், ஆகுமான சதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றைப் பெற முடியும் என்பதையும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த ஹிக்மத்தான செயல் முஸ்லிம்களுக்கு அளவற்ற பயனைத் தந்தது. அவர்களின் வெற்றிக்கான வழிகளில் எளிமைகள் ஏற்பட்டு விட்டன. அவர்கள் முன்னேறிச் செல்லும் போது, பின்னாலிருந்து தாக்கப்பட்டு அவர்களின் வழி அடைபட்டு விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கவில்லை.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கடைசியில் கூறினார்கள்:* பின்னர் நடைபெற்ற போர்கள் மற்றும் கிடைத்த வெற்றிகளைப் பற்றி இனி வரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)